சென்னை–35, உள்ளாட்சி நிதித் தணிக்கை, இயக்கக துணை இயக்குநர் அவர்களின்

செயல்முறை ஆணை

ஆணை பிறப்பிப்பவர் – திரு. சௌ. இரவிச்சந்திரன், பி.எஸ்சி.,

துணை இயக்குநர்

செ.மு.ஆ. ந.க.எண். ப & நி. II (6) / 29676 / 2019 நாள். 04.08.2021

பொருள்:- பணி – உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை மற்றும் மாநில அரசு தணிக்கைத் துறை – 2016-2017ஆம் ஆண்டுக்கான காலியிட மதிப்பீட்டின்படி பணிமாறுதல் பணி நியமனம் வழி பதவி உயர்வில் இளநிலை உதவியாளர்களாகப் பணியமர்த்தப்பட்டவர்கள் – பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடுவது – தொடர்பாக.

பார்வை:-
1) உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர் அலுவலக செயல்முறை ஆணை ந.க.எண் ப & நி II (6) / 29676 / 2019, நாள் 11.09.2020
2) உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர் அலுவலக குறிப்பாணை ந.க.எண் ப & நி II (6) / 29676 / 2019, நாள் 09.11.2020

❖ ❖ ❖

உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர் அலுவலக பார்வை (1)–ல் காணும் செயல்முறை ஆணையின் வழி, உள்ளாட்சி நிதித் தணிக்கை மற்றும் மாநில அரசு தணிக்கைத் துறைகளில், 15.03.2016–ஐ அறுதி நாளாக கொண்ட 2016–2017–ஆம் ஆண்டுக்கான காலியிட மதிப்பீட்டின்படி பணிமாறுதல் பணி நியமனம் வழி பதவி உயர்வில் இளநிலை உதவியாளர்களாக பணியமர்த்த தகுதிவாய்ந்த பதிவுரு எழுத்தர்கள் / அலுவலக உதவியாளர்களை கொண்ட தேர்ந்தோர் பெயர்ப்பட்டியல் வெளியிடப்பட்டது. மேற்படி தேர்ந்தோர் பெயர் பட்டியலில் இடம் பெற்ற தனியர்களுக்கு பார்வை (2)–இல் காணும் குறிப்பாணை வழி இளநிலை உதவியாளர்களாக பணியமர்த்தல் ஆணைகள் வெளியிடப்பட்டு தனியர்கள் பணியமர்த்தப்பட்ட அலுவலகத்தில் பணி சேர்ந்துள்ள நிலையில் இணைப்பில் காணும் விவரப்படி தமிழக அமைச்சுப் பணி தொகுதி 22 தரம் 14–இன் படி இவர்களின் பணி ஒழுங்குபடுத்தப்பட்டு, இளநிலை உதவியாளர் பதவியில் தனியர்கள் பணி சேர்ந்த நாள் முதல் ரூ.19500–62000 (நிலை – 8) என்ற ஊதிய நிரக்கில் பணிவரன்முறை செய்து இதன் வழி ஆணை வெளியிடப்படுகிறது.

2) இத்தனியர்களுக்கு தமிழ்நாடு அமைச்சுப் பணி விதிகள் 32 (a) (i)–இன்படி இளநிலை உதவியாளராகப் பணி சேர்ந்த நாள் முதல் மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டு ஆண்டுகள் பணிக்காலம் தகுதிகாண் பருவமாக நிர்ணயிக்கப்படுகிறது.

3) இத்தனியர்கள் தமிழ்நாடு அமைச்சுப் பணி விதிகள் 34–ன் இணைப்பு V–ன் கீழ் 8 ன்படி தகுதிகாண் பருவ காலத்திற்குள் பவானிசாகர் தமிழ்நாடு அரசு அலுவலர் பயிற்சி மையத்தினால் நடத்தப் பெறும் அரசு அலுவலர் அடிப்படைப் பயிற்சியினை நிறைவு செய்யும்

நிலையிலேயே தகுதிகாண் பருவம் முடித்ததாக விளம்பி ஆணையிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இத்தனியர்களில் எவரேனும் இளநிலை உதவியாளராக பணிசேர்ந்த நாளில் 53 வயதை கடந்திருந்து, விதிகளின் படி பவானிசாகர் அரசு அலுவலர் அடிப்படைப் பயிற்சியிலிருந்து விலக்கு கோரும் நேர்வில், உரிய கருத்துரு தலைமையலுவலகத்திற்கு விரைந்து அனுப்பப்பட வேண்டும்.

4) இப்பணிவரன்முறை ஆணை விவரத்தினை சம்பந்தப்பட்ட பணியாளர்களின் பணிப்பதிவேடுகளில் பதியப்படுவதை உறுதிசெய்து கொள்ளவேண்டும்.

5) இச்செயல்முறை ஆணை பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகை உடன் அளிக்கப்பட வேண்டும்.

05/08/2021

துணை இயக்குநர்

இணைப்பு – I

05/08/21

பெறுநர்

சம்பந்தப்பட்ட இளநிலை உதவியாளர்கள்,
சம்பந்தப்பட்ட அலுவலகத் தலைவர் மூலமாக

நகல்

1) இயக்குநர் மேசைக்கு
2) இயக்குநர் மாநில அரசுத் தணிக்கைத் துறை, சென்னை-35
3) இயக்கக இணை இயக்குநர் / துணை இயக்குநர்கள் / உதவி இயக்குநர் (நி)
4) மண்டல இணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, செங்கல்பட்டு / திருநெல்வேலி / மதுரை / திருச்சி
5) உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, காஞ்சிபுரம் / தூத்துக்குடி / திண்டுக்கல் / திருச்சி
6) ஆய்வர் – தலைமையிடம், ப & நி II பிரிவு
7) உபரி – 5

இணைப்பு – I

ந. க. எண். ப & நி. II (6) / 29676 / 2019 நாள்: **04.08.2021**

| வ.எண் | பெயர், பதவி திருவாளர்கள் / திருமதி | தற்பொழுது பணிபுரியும் அலுவலகம் | நியமன முறை | பணி சேர்ந்த நாள் மற்றும் பணி வரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|
| 1. | சி. பூங்கொடி, இளநிலை உதவியாளர் | உதவி இயக்குநர் அலுவலகம், உள்ளாட்சி நிதித் தணிக்கை, திண்டுக்கல் | பணி மாறுதல் பணி நியமனம் | **26.02.2021** பி.ப |
| 2. | ர. சையத் சுல்தான் இப்ராகிம், இளநிலை உதவியாளர் | உதவி இயக்குநர் அலுவலகம், உள்ளாட்சி நிதித் தணிக்கை, திருச்சி | பணி மாறுதல் பணி நியமனம் | **19.02.2021** மு.ப |
| 3. | மு. பால்ராஜ், இளநிலை உதவியாளர் | உதவி இயக்குநர் அலுவலகம், உள்ளாட்சி நிதித் தணிக்கை, தூத்துக்குடி | பணி மாறுதல் பணி நியமனம் | **11.11.2020** மு.ப |
| 4. | ப. பிச்சாண்டி, இளநிலை உதவியாளர் | உதவி இயக்குநர் அலுவலகம், உள்ளாட்சி நிதித் தணிக்கை, காஞ்சிபுரம் | பணிமாறுதல் பணி நியமனம் | **16.11.2020** மு.ப |

05/08/2021

**துணை இயக்குநர்**

05/08/21